1972 மார்ச் 14]

திரு. கு. அ. பொம்மன்: தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்புச் செய்தவர்களுக்கு 3 ஏக்கரா கொடுப்பதற்கு அரசாங்க ஆணையிருந்தும் இப்பொழுதும் 2 சென்டு, 3 சென்டு நிலங்கள் ஒதுக்குவதாக புகார்கள் வந்திருப்பது தெரியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அப்படி புகார் இருப்பதாகத் தெரியவில்லை. குறிப்பிட்ட புகார் இருக்குமாயின் வருவாய்த் துறை அமைச்சருக்கு எழுதி அனுப்பினால், நடவடிக்கை எடுக்கப்படும்.

Inspection Bungalow for Pallipet

* 487 *Q.*—THIRU E. S. THYAGARAJAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have sanctioned the construction of Inspection Bungalow at Pallipet in Chingleput district; and

(*b*) if so, when the work will be started?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) செங்கற்பட்டு மாவட்டத்தில் திருத்தணி வட்டத்தில் உள்ள பள்ளிப்பேட்டையில் ஒரு ஆய்வாளர் மாளிகையைக் கட்டும் செயற்குறிப்புக்கு அரசு கொள்கையளவில் ஒப்புதல் அளித்துள்ளது.

திரு. ஈ. எஸ். தியாகராஜன்: அது எப்பொழுது துவங்கப்படும் என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பள்ளிப்பட்டு கிராமத்தில் சர்வே நம்பர் 125- இந்தக் கட்டம் கட்ட வேண்டும் என்று செயற்கிறிப்பு இருந்தது. ஆனால், கிராம மக்கள் ஆட்சேபணை செய்து வேறு இடம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தை ஆர்ஜிதம் செய்வதற்கு கலெக்டர் அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். ஆர்ஜித நடவடிக்கை பூர்த்தியான பிறகு கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவர் அவர்களே, இப்படி பயணிகள் மாளிகை எந்தெந்த மாவட்டத்தில் கட்ட அரசு உத்தேசித்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

°விடை இல்லை.